**IN THE COURT OF ADHOC - (II)**
**CITY CIVIL COURT, CHENNAI -104**

**Pw1:Balajivenkat** **OS. NO:4093/2019** **DATE:20.02.2024**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி 1 ஆம் பிரதிவாதி தரப்பில்

வா.சா.ஆ.6 பக்கம் 6ல் கண்டுள்ளவாறு எத்தனை **Payment refer** செய்துள்ளேன் என்றால் நான்கு **payment refer** செய்துள்ளேன். 1 மற்றும் 3 **payments** பற்றி நான் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2வது **payment** பற்றியும் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக நான் எந்த **payment**டும் பெறவில்லை என்று தான் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன்.

என்னுடைய வழக்குரையில் நான்காவது **payment** ஆக காசோலை கொடுத்ததாக மட்டும் சொல்லியிருக்கிறேன். அதற்காக ஆதாரம் இருந்ததால் அதை மட்டும் வழக்குரையில் குறிப்பாக சொல்லியிருக்கிறேன். தாவா சொத்து சம்பந்தமான வழக்குகள் அனைத்தும் முடிந்தப்பிறகு தான் பணம் தருவேன் என்று 1 ஆம் பிரதிவாதி என்னிடம் சொன்னதற்கான ஆதாரம் இருக்கிறதா என்றால் இல்லை. என்னுடைய வழக்குரை பாரா 11ல் 2 ஆம் பிரதிவாதி மீது பணம் வசூல் செய்வதற்கான நடவடிக்கை

எடுத்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் நோட்டீஸ் அனுப்பினேன் ஆனால் அவர் இல்லை என்று சொல்லி நோட்டீஸ் திரும்பவந்துவிட்டது. நான் 2 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய நோட்டீஸ் நகல் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கிற்கு முன்பாக 2 ஆம் பிரதிவாதிமீது வேறு எதாவது வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 2013 ல் எனக்கு வந்தது என்றால் சரிதான். இந்த வழக்கை நம்பர் செய்வதற்கு மூன்று வருடம் காலஅவகாசம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்றால் எனது வழக்கறிஞரை கேட்டால் தான் தெரியும். வழக்குரை பாரா 6 ல் **SA 1428/2013** இரண்டாவது மேல்முறையீடு வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாக சொல்லியிருக்கிறேன். 3 ஆம் பிரதிவாதி தொடங்கிய வழக்கு 2012 ல் முடிவுக்கு வந்தத என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் அவ்வாறு சொல்லவில்லை. கூட்டுறவு வங்கி உத்தரவு பிறப்பித்து 3 ஆம் பிரதிவாதி தொடங்கிய வழக்கு முடிவுற்றதாக சொன்னார். **AS 374/2010** வழக்கு 4.7.2012 ல் முடிவுற்றதாக என்னுடைய முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன். கூட்டுறவு வங்கி சம்பந்தமாக எதுவும் சொல்லவில்லை என்றால் குணசேகரன் உரிமையாளர் இல்லை என்று சொன்னதற்கான உத்தரவு தாக்கல் செய்துள்ளேன். கூட்டுறவு வங்கி

சம்பந்தமான வழக்கு 2010 ல் முடிவுக்கு வந்தது. அதனால் 2012 ல் கூட்டுறவு வங்கி சம்பந்தபட்ட வழக்கு முடிவுற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கிற்கு வழக்குமூலமே இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிரைய தொகையை முழுவதையும் நான் பெற்றுக்கொண்டுவிட்டேன் என்றும், தற்போது வழக்கிற்காக கிரைய தொகை எதுவும் பெறவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் இரண்டாம் பிரதிவாதியும் ஒன்றாக சேர்ந்துக்கொண்டு, பொய்யான காரணங்களை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை— வாதி தரப்பில்</u>

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 6 பக்கம் 6 ல் நான்கு தேதிகளில் **Payment** கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. **Payment** கொடுத்ததாக சொல்லப்படும் காசோலை 1 மற்றும் 3 ஐ தகவல் அறியும் சட்டப்படி வங்கியிடம் தகவல் கேட்டுள்ளேன்.

மறுகுறுக்கு விசாரணை இல்லை.